## கீழாநெல்லி

1. **அசுவினி மேக்ரோசைபம் யூபார்பியே**

**சேதத்தின் அறிகுறி:**

- குஞ்சுகளும், பூச்சிகளும் இலைகளில் உள்ள சாற்றை உறிஞ்சும்
- தாவரங்கள் பலவீனமற்று காய்ந்துவிடும்
- தாக்கப்பட்ட இலைகள் பச்சையமற்று உதிர்ந்துவிடும்
- முடிலில் தாவரங்கள் காய்ந்துவிடும்

**பூச்சியின் விபரம்:**

- பூச்சியின் உடம்பு நீளமாகவும், பேரிக்காய் வடிவத்திலும், சிவப்பு கண்களுடனும், கருப்பு கார்ளிக்கிளுடனும், இளஞ்சிவப்பு நிறத்திலும் காணப்படும்

**கட்டுப்படுத்தும் முறை:**

- தாக்கப்பட்ட தாவரப்பகுதிகளை சேகரித்து அழித்துவிடவும்
- வேப்பங்கொட்டை கரைசல் 5 சதவிதம் (அ) வேப்பம் எண்ணெய் 3 சதவிதம்
- மிதைல் பாரத்தியான் (அ) லின்டேன் பவுடர் களத்தில் போடவும். அவ்வாறு செய்தால் எறும்பின் நடமாட்டத்தை கட்டுப்படுத்தலாம்

2. **வெள்ளை ஈ :**

**தாக்குதளின் அறிகுறி:**

- குஞ்சுகளும், பூச்சிகளும் இலைகளில் உள்ள சாற்றை உறிஞ்சும்

- தாவரங்கள் பலவீனமற்று காய்ந்துவிடும்
- இலைகள் பச்சையம் குறைந்து, முன்பே உதிர்ந்து விடும்
- கடைசியில் தாவரங்கள் காய்ந்துவிடும்

**கட்டுப்படுத்தும் முறை:**

- தாக்கப்பட்ட தாவரப் பகுதிகளை பொறுக்கி அழித்துவிட வேண்டும்
- வேப்பங்கொட்டைச்சாறு 5 சதவிதம் (அ) வேப்பம் எண்ணெய் 3 சதவிதம்
- மிதைல் பாரத்தியான் (அ) லின்டேன் பவுடர் தெளித்தால் எறும்பின் நடமாட்டத்தை தடுக்கலாம்

3. **இலைப்பான், திரிப்ஸ் டபாசி:**

**சேதத்தின் அறிகுறி:**

- குஞ்சுகளும், பூச்சிகளும் இலைகளை சுரண்டித் திண்ணும்
- இலைகள் சுருண்டு உதிர்ந்துவிடும்
- செடிகள் கடைசியில் செத்துப்போகும்

**பூச்சியின் விபரம்:**

- குஞ்சுகளும், பூச்சிகளும் இளம்மஞ்சள் நிறத்தில் காணப்படும்

**கட்டுப்படுத்தும் முறை:**

- வேப்பங்கொட்டைச்சாறு 5 சதவிதம் (அ) வேப்பம் எண்ணெய் 3 சதவிதம்
- மஞ்சள் வண்ண ஒட்டுப்பொறி எக்டர்க்கு 12 வைக்கவும்

4. **சிவப்புநிற சிலந்திப்பூச்சி, டெட்ரானைக்கஸ் யுர்டிகே**

**சேதத்தின் அறிகுறி:**

- சிலந்தி உண்ட இடங்களில் வெள்ளைப் புள்ளிகள் தோன்றும்
- முற்றிய நிலையில் இலை முழுவதும் வெள்ளையாகி, காய்ந்துவிடும்

**பூச்சியின் விபரம்:**

- குஞ்சுகளும், பூச்சிகளும் சிவப்பு நிறத்தில் தோன்றும்
- இலைகளின் அடிப்பகுதியில் முட்டைகள் காணப்படும். இது வெள்ளையாகவும், உருளை வடிவமாகவும் காணப்படும்

**கட்டுப்படுத்தும் முறை:**

- டைக்கோபால் 3 மி.லி (அ) நனையும் கந்தகம் 2 கிராம் / லிட்டர்